# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இலங்கை பப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2024, பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இலங்கை பப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்**

[2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்.) 13/2022

**(341 ஆம் அத்தியாயமான) இலங்கை பப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை*

இலங்கை பப்டிஸ்ட் சங்கம், (341 ஆம் அத்தியாயமான) இலங்கை பப்டிஸ்ட் சங்கக் கட்டளைச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட தாதலாலும்:

இலங்கை பப்டிஸ்ட் பேரவை என முன்னர் அறியப்பட்ட இலங்கை பப்டிஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள் தீர்மானமொன்றுக்கு பயன் கொடுக்கும் நோக்கத்துக்காகச் சொல்லப்பட்ட அச்சங்கத்தின் பெயரைத் திருத்துவதற்கு சொல்லப்பட்ட தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளதாதலாலும் அத்தகைய சங்கத்தின் பெயரை மாற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண் ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இலங்கை பப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*341 ஆம் அத்தியாயத்துக்கான பொதுவான திருத்தம்*

**2.** (341 ஆம் அத்தியாயமான) இலங்கை பப்டிஸ்ட் சங்கக் கட்ட ளைச் சட்டத்தில் (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் இலங்கை பப்டிஸ்ட் சங்கம் (அப்பெயரினா லாயினுஞ்சரி அல்லது "சங்கம்" எனும் சுருக்கீட்டினாலாயினுஞ்சரி) குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தனாலொழிய, "இலங்கை பப்டிஸ்ட் சங்கம்" அல்லது "சங்கம்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "இலங்கை பப்டிஸ்ட் திருச்சபை" அல்லது "திருச்சபை" என்னும் சொல்லமைப்புக்கள் இடப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய வைக்கான சேமிப்புக்கள்

**3.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது எழுதி நிறைவேற்றப்பட்ட எத்தகைய னவுமான ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு சாசனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றிலுமுள்ள இலங்கை பப்டிஸ்ட் சங்கத்தினால் அல்லது அதன் சார்பில் அத்தேதியில் இருக்கின்றது மான இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், ''இலங்கை பப்டிஸ்ட் திருச்சபையினால்'' அல்லது சார்பில் செய்யப் படுகின்றனவாகவும், வழங்கப்படுகின்றனவாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்படுகின்றனவாகவும் மற்றும் செய்யப்பட்டுள்ளன வாகவும், வழங்கப்பட்டுள்ளனவாகவும் அல்லது எழுதி நிறை வேற்றப்பட்டுள்ளனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) ''இலங்கை பப்டிஸ்ட் சங்கம்'' அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும், மேன்முறையீடுகளும் மற்றும் வேறு சட்ட நடவடிக்கை களும் தணிந்து போதலோ அல்லது நிறுத்தப்படுதலோ ஆகாதென் பதுடன், ''இலங்கை பப்டிஸ்ட் திருச்சபை'' அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தவும்படலாம் அல்லது வலுவுறுத்தவும்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள தாயிருக்கின்ற (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமை களும் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் தவிர்ந்த, ''இலங்கை பப்டிஸ்ட் சங்கத்தின்'' எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும், கடப்பாடுகளும், ''இலங்கை பப்டிஸ்ட் திருச்சபையின்'' உரிமை களாகவும், பொறுப்புக்களாகவும், கடப்பாடுகளாகவும் கருதப் படுதல் வேண்டும்.

ஐயங்களைத் தவிர்த்தல்

**4.** ஏதேனும் ஐயத்தைத் தவிர்க்கும் நோக்கத்துக்காக, ''இலங்கை பப்டிஸ்ட் திருச்சபையானது'' எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினால் கூட்டிணைக்கப் பட்ட ''இலங்கை பப்டிஸ்ட் சங்கத்துக்கான'' வழியுரிமையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*